2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள், சிற்பக்கலைகள் மற்றும் கிராமிய மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு

செலவினத் தலைப்பு இலக்கம் - 401

உள்ளடக்கம்

அத்தியாயம் 01 - நிறுவனக் குறிப்பு/ நிறைவேற்றுச் சுருக்கம்

அத்தியாயம் 02 - முன்னேற்றமும் எதிர்கால தூரநோக்கும்

அத்தியாயம் 03 - குறித்த ஆண்டின் ஒட்டுமொத்த நிதி சார்ந்த செயலாற்றுகை

அத்தியாயம் 04 - செயலாற்றுகைச் சுட்டி

அத்தியாயம் 05 - நிலையான அபிவிருத்திக் குறிக்கோள்களை (SDG) அடைந்து கொள்வதற்கான செயலாற்றுகைத் திட்டம்

அத்தியாயம் 06 - மனித வளங்கள் பற்றிய குறிப்பு

அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை

அத்தியாயம் 01

நிறுவனக் குறிப்பு / நிறைவேற்றுச் சுருக்கம்

1.3 அறிமுகம்

அரசாங்கம் பிரகடனப்படுத்திய கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடங்கிய "நாட்டை முறையாகக் கட்டியெழுப்பும் சௌபாக்கிய தூரநோக்கத்தினுள்" இனங்காணப் பட்டுள்ள பத்து முக்கிய கொள்கைகள் மீது விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ள 'ஒழுக்கமான விநயமான சட்டத்தை மதிக்கின்ற ஒரு சமூகத்தை" (பக்க இலக்கம் 70-74) கட்டியெழுப்பும் கொள்கைக்கு இணங்க 2187/27 ஆம் இலக்க 2020.08.09 ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2194/74 ஆம் இலக்க 2020.09.25 ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2202/25 ஆம் இலக்க 2020.11.20 ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல் ஆகிய வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் இந்த அமைச்சு தாபிக்கப்பட்டு இதற்கு சட்டரீதியான பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அத்தகைய பொறுப்புகளுக்கு அமைவாக தேசிய மரபுரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் கலாச்சாரம், இலக்கியம் மற்றும் கலைகள் என்பவற்றை தரத்தில் உயர்ந்ததாகப் பேணிச் செல்வதற்குரிய அந்தந்த சட்டதிட்டங்களினதும் மற்றும் கட்டளைச் சட்டங்களினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க கலாச்சாரம், தேசிய மரபுரிமைகள், அருங்கலை கலை, கிராமிய கலைகள் ஊக்குவிப்பு முதலிய விடயங்கள் சம்பந்தமான கொள்கைகளை ஆக்குவதற்கு உதவுதல், தேசிய வரவு செலவுத் திட்டம், தேசிய முதலீட்டுத் திட்டம் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டம் என்பவற்றின் கீழ் வருகின்ற கருத் திட்டங்களைச் செயற்படுத்துதல் மற்றும் நிருவாகப் பொறுப்புக்கள் சாட்டப்பட்டுள்ள திணைக்களங்கள், அரசாங்கக் கூட்டுத் தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் என்பவற்றின் விடயங்கள் மற்றும் கருமபணிகள் என்பன சம்பந்தமான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத் திட்டங்கள் என்பவற்றை செயற்படுத்துதல், பின்னூட்டல் செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல், தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள், கலைகள் மற்றும் கிராமிய கலைத் திறன்கள் ஊக்குவிப்பு முதலிய விடயங்கள் இராஜாங்க அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

1.4 தூரநோக்கு

தேசிய மரபுரிமைகளைப் பாதுகாத்தல், இலக்கியம் மற்றும் கலைகள் முதலியவற்றை ஊக்குவித்தல் என்பவ்றின் ஊடாக பெருமையும் மதிப்பும் மிக்க ஓர் இலங்கையைக் கட்டியெழுப்புதல்.

செயற்பணி

தேசிய மரபுரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் கலாச்சாரம், இலக்கியம் மற்றும் கலைகள் என்பவற்றை தரத்தில் உயர்ந்ததாகப் பேணி செல்வதற்கு உரிய அந்தந்த சட்டதிட்டங்களினதும் மற்றும் கட்டளை சட்டங்களினதும் ஏற்பாடுகளுக்க இணங்க கலாச்சாரம், தேசிய மரபுரிமைகள், அருங் கலை, பாரம்பரியக் கலைகள் மற்றும் கிராமிய கலைத் திறன்கள் என்பவற்றை ஊக்குவிப்பதற்கும் மற்றும் இலங்கையில் காணப்படுகின்ற தொல்பொருள் மதிப்புடைய மரபுரிமைகளை முகாமை செய்வதற்கும் உதவுதல்.

குறிக்கோள்கள்

1. இலங்கையின் தேசிய மரபுரிமைகளை சட்டமுறையாக இனங்கண்டு அத்தகைய தேசிய மரபுரிமைகளைப் பாதுகாத்தல்.
2. தேசிய மரபுரிமைகள், அருங் கலைகள், கிராமியக் கலைத் திறன்கள் ஊக்குவிப்பு விடயத்திற்குரிய கொள்கைகளை ஆக்குவதற்கு உதவுதல்.
3. கட்புல மற்றும் கட்புலனாகா கலாச்சார மரபுரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அத்தகைய மரபுரிமைகளைப் ஊக்குவித்தல்.
4. நாட்டின் சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகள் ஆகியோர் அடங்கலாக அனைத்து மக்கள் மத்தியிலும் தேசிய மரபுரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் ஒழுக்கநெறி என்பன பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
5. கலாச்சாரம் சார் விடயப் பிரிவுகளுக்குரிய வெளியீடுகளின் ஆக்கபூர்வ விடயங்களையும் மற்றும் பல்லினத்துவத்தையும் போஷித்தல்.
6. ஒவ்வொரு நிறுவனத்திலும் காணப்படுகின்ற நியதிச்சட்ட நிலைகளை சட்டமுறையாக உறுதிசெய்து அத்தகைய நிலைமைகளை உரியவாறு இற்றைப் படுத்துதல்.
7. ஆதிவாசிகளினதும் மற்றும் தனித்துவமான விஷேட அடையாளமுடைய மக்களினதும் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் திருப்திகரமான ஒரு மக்கள் சமூகத்தைக் கட்டியெழுப்புதல்.
8. கலைஞர்களின் தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.
9. உள்நாட்டுக் கலை சார் ஆக்கங்களை சர்வதேச சமூகம் அனுபவிக்கும் வகையில் வாய்ப்பளித்து, வசதிகளை செய்து கொடுத்தல்.
10. தேசிய கலை சார் ஆக்கங்களைப் பாதுகாத்து, அவற்றை ஊக்குவித்து தரத்தில் உயர்ந்ததாக அவற்றை மக்கள் அனுபவிக்கக் கூடிய வகையில் வசதிகளை செய்து கொடுத்தல்.
11. இலங்கையில் உள்ள தொழில்பொருள் மதிப்புமிக்க மரபுரிமைகளை முகாமை செய்தல்.

1.3 விஷேட முன்னுரிமைகள்

viii. தேசிய மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்காக தற்பொழுது காணப்படும் நிறுவனங்களின் உற்பத்தித்திறன்களை மேம்படுத்துவது தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதல்.

ix. அச்சீட்டு நூல்கள், நாட்டியங்கள், திரைப் படங்கள், ஓவியங்கள் மற்றும் செதுக்கல் வேலைகள், சங்கீதம் மற்றும் நடனம் முதலிய தொழில் சார் துறைகளை ஊக்குவிக்க தேவையான வசதிகளை செய்து கொடுத்தல்.

x. தேசிய அபிமானத்தை அடிப்படையாகக் கொண்டு நூலாசிரியர்களின் நூல் உரிமைகளுக்கு உரிய கொடுப்பனவுகளை செலுத்தும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச சமவாயங்களுக்கு இணங்க முறையான ஒரு பொறிமுறைத்திட்டத்தை அறிமுகப்படுத்துதல்.


xi. வசதிகள் நிறைந்த முழுமையான ஒரு நடன நிலையத்தை தாபித்து, கலைஞர்களின் தொழில் பாதுகாப்பை உறுதிசெய்யும் நிமித்தம் ஒரு நிறுவனக் கட்டமைப்பை தயாரித்தல்.

xii. கலை மைய ஆக்கங்களைப் பாதுகாத்தல் மற்றும் அவற்றைக் காட்சிப் படுத்துவதற்கு தேவையான விஷேட வசதிகளை செய்து கொடுத்தல்.

xiii. பாரம்பரிய மற்றும் நவீன நடனவியலாளர்களின் அருங் கலை சார்ந்த ஆக்கங்களை காட்சிப்படுத்தத் தேவையான வாய்ப்புகளை பெற்றுக் கொடுத்தல் மற்றும் ஓவியர்களுக்கும் மரச்செதுக்கல் நிபணர்களுக்கும் தத்தமது நிர்மாண ஆக்கங்களை விற்பனை செய்வதற்கான சுற்றுலா ஹோட்டல்கள் வசதிகளையும் மற்றும் சுற்றுலா கவர்ச்சி வாய்ந்த ஸ்தல இடவசதிகளையும் பெற்றுக் கொடுப்பதற்கான வேலைத் திட்டங்களை சுற்றுலா அமைச்சுடன் இணைந்து ஒருங்கிணைப்பு செய்தல்.

xiv. கிழக்கு மாகாணத்தினுள் காணப்படும் தொழில்பொருள் மதிப்புமிகு மரபுரிமைகளை முகாமை செய்யும் ஜனாதிபதி சிறப்பு செயலணியுடன் இணைந்து ஒருங்கிணைப்பு செய்தல்.

1.4 நிறுவனக் கட்டமைப்பு



1.5 நிருவாக பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்ட நிறுவனங்கள்

01. தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களம்
02. டவர் மண்டப திரையரங்கு மன்றம்
03. இலங்கைக் கலை மன்றம்
04. கிராமிய ஜனகலா கேந்திர நிலையம்
05. காலி மரபுரிமைகள் மன்றம்
06. மகிந்த ராஜபக்ஷ தேசிய திரைப்படங்கள் கூடகம்
07. தேசிய அருங்கலை நிலையம் (தாமரைத் தடாகம்)
08. மலைநாட்டு மரபுரிமைகள் பாதுகாப்புக்கான இடைக்கால நியதிச்சட்ட சபை
09. அபே கம

அத்தியாயம் 02

முன்னேற்றமும் எதிர்கால தூரநோக்கமும்

அமைச்சு அடைந்த விஷேட சாதனைகள் - ஆண்டு 2021
இராஜாங்க அமைச்சு செயற்படுத்திய நிகழ்ச்சித் திட்டங்கள்.....

"தேசிய மரபுரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் கலாச்சாரம், இலக்கியம் மற்றும் கலை என்பவற்றை தரத்தில் உயர்ந்ததாகப் பேணிச் செல்வதற்கு உரிய அந்தந்த சட்டதிட்டங்களுக்கும் மற்றும் கட்டளைச் சட்டங்களுக்கும் இணங்க கலாச்சாரம், தேசிய மரபுரிமைகள், அருங்கலை, கிராமிய கலை என்பவற்றின் ஊக்குவிப்பு விவகாரங்கள் சம்பந்தமான கொள்கைகளை ஆக்குவதற்கு உதவுவது, தேசிய வரவுசெலவுத்திட்டம், தேசிய முதலீட்டுத் திட்டம் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் என்பவற்றின் கீழ் காணப்படும் கருத் திட்டங்களை செயற்படுத்துவது என்பன எமது இராஜாங்க அமைச்சினது பொறுப்புப் பணிகளாகும். ஆகையால் இந்த அமைச்சை தாபிப்பதன் ஊடாக எதிர்பார்த்த இலக்குகளை அடைந்து கொள்ளும் பொருட்டு 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் விஷேட கவனத்தை செலுத்தி அதிக பல நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப் பட்டுள்ளன. பல நிகழ்ச்சித் திட்டங்களும் மற்றும் பல கருத் திட்டங்களும் நேரடியாக அமைச்சின் மூலம் செயற்படுத்தப்படுகின்றன. அமைச்சுக்கு 2021 ஆம் ஆண்டின் நிமித்தம் ஒதுக்கப்பட்டிருந்த மிக மட்டுப்பட்டளவான நிதியேற்பாடு உச்ச வினைத் திறன் வாய்ந்ததாகப் பயன்படுத்தப்பட்டது.

❖ தேசிய மரபுரிமைகளை இனங்காணுவதற்கும் அத்தகைய மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கும் உரிய நிலையான ஒரு வேலைத் திட்டம்.....

"தேசிய மரபுரிமைகளை சரியாக நிர்ணயிக்கும் மற்றும் இனங்காணும் நிமித்தம் பொருத்தமான ஒரு முறையியலை முன்வைப்பதற்கான" ஏழு உறுப்பினர்கள் அடங்கிய ஒரு இடைக்கால ஒழுங்குறுத்துகைக் குழு"

தேசிய மரபுரிமைகளை இனங்காணுவதற்கும் மற்றும் பாதுகாப்பதற்கும் உரிய நீண்டகால குறிக்கோள்களின் அடிப்படையில் செயற்படுத்த ஒரு விஷேட முறையியல் இல்லாமை இந்தத் துறையினுள் காணப்படுகின்ற ஒரு பாரிய குறைபாடாகும். இந்த நிலைக்கு நிலையான ஒரு தீர்வாக **ஒரு ஆராய்ச்சி மற்றும் பாதுகாப்புப் பிரிவை தாபிப்பதற்கும் மற்றும் ஆலோசனைகளையும் சிபாரிசுகளையும் பெற்றுக் கொடுப்பதற்கும் என நியமிக்கப்பட்ட** நிபுணர்கள் அடங்கிய குறித்த குழு தயாரித்த அறிக்கையை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து அதற்கு அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள எம்மால் முடிந்தமை நாம் பெற்ற ஒரு மாபெரும் வெற்றியாகும். குறித்த அந்த அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க ஒரு தேசிய மரபுரிமைகள் ஆராய்ச்சி மற்றும் பாதுகாப்பு பிரிவு தாபிக்கப்படும் வரை இலங்கையில் இருக்கின்ற தேசிய மரபுரிமைகளை சரியாக நிர்ணயித்து அவற்றை இனங்காணுவதற்கு பொருத்தமான ஒரு முறையியலை முன்வைப்பதற்காக" ஏழு உறுப்பினர்கள் அடங்கிய ஒரு இடைக்கால ஒழுங்குறுத்துகைக் குழு எதிர்வரும் காலங்களில் நியமிக்கப் படும்.

ஆகையால், நிபணர்கள் அடங்கிய குழுவினது அறிக்கையின் பிரகாரம் இலங்கை மக்களுக்கு உரித்தான தேசிய மரபுரிமைகளை இங்காணுதல், அவற்றைப் பட்டியல்படுத்துதல், பிரகடனப்படுத்துதல், அவற்றை மேலும் பாதுகாத்தல், ஒழுங்குறுத்துதல், சுவீகரித்தல், அத்தகைய மரபுரிமைகள் பற்றிய ஆராய்ச்சிகளை நடத்துதல் மற்றும் ஆராய்ச்சி சார் முடிவுகளை வெளியிடுதல் ஆகிய செயற்பாடுகள் உள்ளடங்கலாக இலங்கையில் உள்ள தேசிய மரபுரிமைகளை உரியவாறு முகாமை செய்வதில் கவனம் செலுத்தும் முறையான ஒரு வேலைத் திட்டம் தயாரிக்கப்படவுள்ளது.

❖ தேசிய மரபுரிமைகளை ஊக்குவிப்பதற்கான உரிய டிஜிட்டல் தொழில் நுட்பத்தை வழங்கி அதன் ஊடாக மறுமலர்ச்சியை ஏற்படுத்துதல்.....

இலங்கையில் காணப்படுகின்ற கட்புலனாகும் மற்றும் கட்புலனாகாத (Tangible & Intangible) தேசிய மரபுரிமைகளை உள்நாட்டு வெளிநாட்டு பிரஜைகளுக்கு மிகவும் கவர்ச்சியான மற்றும் வினைத்திறன் வாய்ந்த விதத்தில் அனுபவிக்கக் கூடியவாறு ஏற்பாடு செய்வதன் ஊடாக தேசிய மரபுரிமைகளைப் பாதுகாத்து அவற்றை பிரபல்லியப்படுத்துவது இந்தக் கருத் திட்டத்தின் குறிக்கோளாகும். ஏற்கெனவே இந்தக் கருத் திட்டத்தின் கீழ்,

- கட்புலனாகு மற்றும் கட்புலனாகா மரபுரிமைகளை பாதுகாப்பதற்கும் மற்றும் ஊக்குவிப்பதற்குமான டிஜிட்டல் உள்ளீட்டு சாதன வசதிகள் (Digital App) நிர்மாணிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன. அந்த டிஜிட்டல் உள்ளீட்டு சாதனத்தினுள் (Digital App) உள்ளீர்க்கும் முகமாக கட்புலனாகு தேசிய மரபுரிமை அடங்கிய 30 வீடியோ ஒலிநாடாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. தேசிய மரபுரிமைகளை பாதுகாப்பதற்கும் மற்றும் அவற்றை ஊக்குவிப்பதற்கும் இதன் மூலம் நவீன தொழில் நுட்ப முறை பிரயோகிக்கப்பட்டு வருகின்றது. நடமாடும் ஸ்மார்ட்டு கையடக்கத்தொலைபேசிகள் பயன்படுத்தப்படும் இன்றைய நவீன பரம்பரையினுள் அந்தத் தொழில் நுட்பத்தின் ஊடாகவே இந்தத் துறை பற்றி ஊக்குவிக்கவும் புரிந்துகொள்ளவும் செய்யப்படுகின்றது.

- மரபுரிமைகளை ஊக்குவிப்பதற்கான "இரண்டு கோடி மரபுரிமைகள் அருளல்" எனும் தொணிப்பொருளில் இரண்டு பாடல்கள் தொகுக்கப் பட்டுள்ளன.

- அமைச்சினது உத்தியோகபூர்வ இணையத்தளத்தை நிர்மாணிக்கும் பணி நிறைவடைந்துள்ளது. தற்பொழுது அதன் மேலதிக அபிவிருத்தி விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. www.heritage.gov.lk என்ற அமைச்சின் இணையத்தளத்தின் ஊடாக பிரவேசிக்க முடியும்.






❖ கலைஞர்களுக்கான Digital App ஐ தயாரித்தல்.....

சகல துறைகளையும் பிரதிநிதிப்படுத்துகின்ற இந்த நாட்டில் வசிக்கும் கலைஞர்களுக்கு தமது ஆக்கங்களை இதில் உள்ளீர்ப்பதன் மூலம் தேசியளவிலும் மற்றும் சர்வதேசளவிலும் வணிக சந்தை வாய்ப்பை


❖ கலைஞர்கள் தரவு முறைமையைத் தாபித்தல்.....

பல கலைப் பிரிவுகளில் ஈடுபடும் கலைஞர்களினதும் மற்றும் கலை நிபுணர்களினதும் தகவல்கள் உள்ளடங்கிய ஒரு தரவுகள் முறைமை இல்லாமையானது, இந்த நாட்டுக் கலைத் துறையில் இருந்த ஒரு பாரிய குறைபாடாகும். அதற்கு ஒரு தீர்வாக சகல கலைத் துறைகளையும் மற்றும் கலை நிபுணத்துவப் பிரிவுகளையும் உள்ளடக்கி, நாட்டில் பல பிரதேசங்களில் பரந்து வாழ்கின்ற கலைஞர்களினது முழுமையான தகவல்களை உள்ளடக்கக் கூடிய உகந்த ஒரு தரவுகள் முறைமையை நிர்மாணிக்கும் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. இந்த நாட்டிலுள்ள கலைஞர்களினதும் மற்றும் கலை நிபுணர்களினதும் தகவல்களை உள்நாட்டிலும் மற்றும் வெளிநாடுகளிலும் வசிக்கின்ற சேவை பெறும் நபர்களுக்கு மிகவும் இலகுவாக பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் தேவையான ஒருங்கிணைப்பை இந்த முறைமையின் மூலம் செய்யக் கூடியதாகவுள்ளது. இந்த முறைமை கலைஞர்களுக்கு இடையிலான உறவுகளை மேம்படுத்த உதவும்.





ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு இந்த Digital App தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கலைஞர்கள் கணனி உள்ளீட்டு சாதனமும் கலைஞர்கள் தரவு முறைமையும் ஒன்றாக செயற்படுத்தப் படும். இதன் நிமித்தம் 2021 ஆம் ஆண்டில் 4.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. எதிர்காலத்தில் இந்த முறைமை பரந்த ஒன்லைன் சந்தை வாய்ப்பாக மேம்படுத்தப்படும்.





❖ கலைஞர்கள் தொடர்பான அவசர விபத்து மற்றும் மருத்துவக் காப்புறுதித் திட்டம்....

இந்த நாட்டில் கலைத் துறையைப் பிரதிநிதிப்படுத்துகின்ற பல வகை கலைஞர்களுக்கு நிரந்தர வருமான வழிகள் கிடையாது. அநேகமான கலைஞர்கள் அவர்களின் ஜீவனோபாயத்தை மிகவும் கஷ்டமான முறையில் சமாளித்துக் கொள்கின்றனர். அத்தகைய ஒரு நிலையிலுள்ள இந்த கலைஞர்கள் நிமித்தம் அவசர விபத்து மற்றும் மருத்துவக் காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்துவது தற்போது ஒரு அத்தியாவசிய தேவையாகும். ஆகையால் கிராமிய கலைத் துறைக்கு முன்னுரிமையை அளிக்கும் முகமாக முழு நாடும் உள்ளடங்கக் கூடிய வகையில் முதல் கட்டத்தில் 550 கலைஞர்களுக்கு மருத்துவ மற்றும் அவசர விபத்துக் காப்புறுதித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் காப்புறுதி நிகழ்ச்சித் திட்டத்தை எதிர்வரும் ஆண்டுகளினுள் மேலும் அதிக கலைஞர்கள் நன்மைகள் அடையக் கூடிய வகையில் செயற்படுத்தப்படும். 2021 ஆம் ஆண்டில் இந்தக் காப்புறுதி நிமித்தம் 9.9 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.





❖ ஆதிவாசிகளின் மரபுரிமைகளைப் பாதுகாத்தல்.....

இந்த நாட்டில் வாழும் ஆதிவாசிகள் / விஷேட தனித்துவ அடையாளம் உடைய மக்கள் குழுக்கள் மீதான கடமைகளை நிறைவேற்றுவதை இன்றியமையாத ஒரு பொறுப்பாகும் என நாம் புரிந்துகொண்டோம். ஆகையால் அந்தப் பொறுப்பை நிறைவேற்றும் நிமித்தம் பல விஷேட நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

தம்பான மக்கள் மரபுரிமைகள் கேந்திர நிலைய எச்சங்கள் காட்சிக் கூடகத்தை தாபிக்கும் பணி எம்மால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒரு விஷேட கரும பணியாகும். பல காலப் பகுதிகளினுள் வெளிநாட்டவர் இந்த நாட்டிலிருந்து எடுத்துச்சென்று அவர்களின் நூதனசாலைகளில் வைத்திருந்த மனித எலும்பு பாகங்களையும் மண்டையோடுகளையும் இந்த நாட்டிற்கு மீண்டும் கொண்டு வந்து அவற்றின் சார்பாக ஒரு கண்காட்சிக் கூடகம் தாபிக்கப்பட்டுள்ளது.





❖ ஆதிவாசிகளை / விஷேட தனித்துவ அடையாளம் உடைய மக்களை பாதுகாப்பதற்கான சேவைகளை நடத்துதல்.....



தம்பான மக்கள் மரபுரிமைகள் கேந்திர நிலைய எச்சங்கள் கண்காட்சிக் கூடகத்தை பார்வையிடுவதற்காக வருகை தருகின்ற நபர்களுக்கு ஆதிவாசி மக்கள் சம்பந்தமான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களை இலகுவாக பெற்றுக் கொள்ளக் கூடியவாறு நவீன தொழில் நுட்ப முறையை பாவித்து கியோஸ் தகவல் முறைமையை (Kiosk Information System) தாபிக்கும் பணியும் ஏற்கெனவே நிறைவடைந்துள்ளது.

அது மட்டுமன்றி ஏற்கெனவே வெளிநாட்டு நூதனசாலைகளில் வைக்கப்பட்டுள்ள இந்த நாட்டு ஆதிவாசி மக்களின் மனித மண்டை ஓடுகள், மனித எலும்புக் கூடுகள், அந்த மக்கள் தமது பாவனைக்கு உபயோகித்த உபகரணங்கள் போன்றவற்றை மீண்டும் இந்நாட்டுக்கு கொண்டு வந்து அவற்றைப் பாதுகாக்கும் பொருட்டு பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

அதே போல் தம்பான, ரத்துகல, ஹென்னானிகல ஆகிய ஆதிவாசிகள் கிராமங்களை மையமாகக் கொண்டு ஆதிவாசி மக்களின் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு அந்த மக்கள் வாழுகின்ற கிராமங்களுக்கு உரிய பிரதேச செயலாளர் அலுவலகங்களின் உதவியுடன் பல நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

- ஹெனானிகல ஆதிவாசிகள் நூதனசாலை வளாகத்தை பராமரிக்க தேவையான உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் அந்த நூதனசாலை வளாகத்தில் நாணல் புற்களினால் வேயப்பட்டுள்ள இல்லத்தின் கூரையை பழுதுபார்த்து அதற்கு வேலி வலைகளை இட்டு அமைத்தல் மற்றும் ஒரு பாதுகாப்பு நுழைவாயிலை கட்டுதல்.
- ரத்துகல ஆதிவாசிகள் கிராமத்தின் ஆதிவாசிகளின் பிள்ளைகளுக்கு ஆதிவாசிகள் பேசும் மொழியைக் கற்பிக்கும் ஒரு நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 50 பிள்ளைகள் அடங்கிய ஒரு குழு குறித்த இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றியது.
- தம்பான மக்கள் மரபுரிமைகள் கேந்திர நிலையக் கட்டிடங்களின் கூரைகளுக்கு நாணல் புற்களை இட்டு அவற்றை புனர்நிர்மாணித்தல்.
- நூதனசாலையின் சுவர்களுக்கு களிமண்ணால் பூச்சுப்பூசுதல் மற்றும் ஏனைய கட்டிடங்களை பழுதுபார்த்தல்.





❖ பிரபல்லியமான கலைஞர்களை மையமாகக் கொண்ட ஒரு கிராமிய கலைக் கிராமம்.....

சமூகத்தில் சரியான முறையில் மதிக்கப்படாத ஆயினும் கலைத் துறைக்கு உன்னத பங்களிப்பை நல்கிய கிராமிய கலைஞர்களை இனங்கண்டு அந்தக் கலைஞர்கள் வாழ்ந்து வந்த பிரதேசங்களிலுள்ள நூலகங்களையும், கலையகங்களையும் நவீனமயப்படுத்தி அந்தக் கலைஞர்களின் பெயரில் உரிமை மாற்றிக்கையளிக்கின்ற விடயம் இந்தக் கருத் திட்டத்தின் மூலமாக மேற்கொள்ளப்படுகின்றது. இந்த ஆண்டு காலப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கருத் திட்டத்தின் கீழ் அனுராதபுர மாவட்டத்தில் பிறந்த பிரபல கலைஞரான காலஞ் சென்ற அமரர் திரு ஆர்.ஜி.எச்.எஸ். ரத்னகுமார அவர்களை மதித்து கௌரவிக்கும் முகமாக துட்டுவெவ மகா வித்தியாலயத்தில் ஒரு அழகியல் பிரிவு தாபிக்கப்பட்டு அது நிறைவு செய்யப் பட்டுள்ளது.

ஹந்தபான்கொட நெட்டுக்கார நெகத்திகே சேதரமன் பெர்னாந்து என்ற கலைஞரின் பெயரில் நிர்மாணித்த கலையகத்தின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

இந்த இரண்டு கருத் திட்டங்களுக்கும் என 9.1 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டது.





❖ தேசிய அபிமான அடிப்படையில் நூலாசிரியர்களின் நூல் பதிப்புரிமைகளுக்கு உரிய கொடுப்பனவுகளை செலுத்தும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு முறையியல்....

இந்த நாட்டுக் கலைத் துறைகளுக்கு சட்டமுறையான பின்னணியின் கீழ் நிர்மாண ஆக்கவியலாளர்களுக்கு நூலாசிரியர் பதிப்புரிமைகள் அந்தஸ்தத்தைப் பெற்றுக் கொள்ளும் வகையில் உரிய சர்வதேச சமவாயங்களுக்கு இணங்க அங்கீகரிக்கப்பட்ட முறையியல்களின் பிரகாரம் தேவையான உதவிகளை பெற்றுக் கொடுக்கும் முகமாக இந்தக் கருத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தக் கருத் திட்டத்தின் மூலம் நிர்மாண ஆக்கங்களின் உண்மையான உரிமையாளர்களுக்கு, ஆக்கங்கள் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உரிய நூலாசிரியர் பதிப்புரிமைகள் அந்தஸ்தத்தை பெற்றுக் கொடுக்கவும், தொழில் மட்டத்தில் அவர்களுக்கு மதிப்பை பெற்றுக் கொடுக்கவும், கலைஞர்களை ஊக்குவிக்கவும், பொருளாதார ரீதியில் அவர்களின் ஜீவனோபாயங்களை மேம்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

- மாவட்ட மட்டத்தில் எழுத்தாளர்கள் அமைப்புகளை தாபிக்கின்ற பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. அவற்றைக் கூட்டிணைந்த சங்கங்களாக ஊக்கவிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.
- தேசிய நடன அமைப்புகளை தாபிக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
- புகைப்படவியலாளர்களின் தேசிய சங்கங்கள் அமைக்கும் பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

❖ நாட்டின் மரபுரிமைகள் நாட்டின் பிள்ளைகளுக்கே எனும் நிகழ்ச்சித் திட்டம் (விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டம்).....

கடந்த கால பழைமை வாய்ந்த கலை சார் நிர்மாண ஆக்கங்களை காண்பிப்பதன் ஊடாக பாடசாலை மாணவர்களினது இரசனை ஆற்றலை மேம்படுத்தத் தேவையான பின்னணியை ஏற்படுத்துதல், கலை அம்சத்தை நோக்கி பிள்ளைகளினுள் ஆர்வத்தை ஏற்படுத்துதல், நாட்டில் உள்ள மரபுரிமைகள் நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் முக்கியத்துவம் என்பதை புரிந்துகொள்ளச் செய்தல் மேலும் அந்த மரிபுரிமைகளை நேசிக்கின்ற சிறுவர் பரம்பரையை உருவாக்குதல், எதிர்கால சந்ததியினருக்கு இலங்கை மரபுரிமைகளை பாதுகாத்துக் கொடுத்தல் முதலியவை இந்த கருத் திட்டத்தின் குறிக்கோள்களாகும். பிரிவெனாக்களில் கல்வி பயிலுகின்ற மாணவர்களுக்கு ஹேவிஷி வாத்தியங்கள் பற்றிய பயிற்சிகள் குறித்த இந்தக் கருத் திட்டத்தின் கீழ் நடத்தப்படுகின்றன.

❖ நாட்டின் மரபுரிமைகள் பிள்ளைகளுக்கே எனும் நிகழ்ச்சித் திட்டம் - பிள்ளைகளின் கலை ஆர்வத்தை அதிகரிப்பதற்கு பொருத்தமான நிகழ்ச்சி திட்டங்களை செயற்படுத்துதல்.....

முழு நாடும் உள்ளடங்கும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 102 பிரிவெனாக்களுக்கு இந்தக் கருத் திட்டத்தின் கீழ் ஹேவிஷி எனும் வாத்திய உபகரணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குகள் கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளர் அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க தற்பொழுது நடன பாடத்தை கற்பிக்கும் பிரிவனாக்களுக்கு 54 எண்ணிக்கையான கெட்டவர எனும் மேளங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. மேலும் எஞ்சியுள்ள நிதிகளைப் பயன்படுத்தி அறநெறி பாடசாலைகளுக்கு ஹேவிஷி எனும் 4 வாத்திய உபகரணப் பொதிகளும் மற்றும் 04 கெட்டவர மேளங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. இவற்றின் நிமித்தம் 3.1 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டது.

❖ மனோபாவ விருத்திப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.....

இந்த அமைச்சினதும் மற்றும் இந்த அமைச்சின் செயல்நோக்கின் கீழ் வருகின்ற நிறுவனங்களினதும் உற்பத்தித் திறன்களையும் மற்றும் வினைத் திறன்களையும் மேலும் மேம்படுத்துவதற்கான முறையான நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. அந்த நிகழ்ச்சித் திட்டங்களின் முதல் கட்டமாக அமைச்சின் சகல அலுவலர்களுக்கும் ஒரு நாள் கால 05 வேலையரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. அமைச்சின் செயல்நோக்கின் கீழ் வருகின்ற நிறுவனங்களின் தலைவர்களுக்கும் ஒரு ஒருநாள் கால வேலையரங்கு நடத்தப்பட்டுள்ளது.

மேலும் அமைச்சின் செயல்நோக்கின் கீழ் வருகின்ற நிறுவனங்களின் அனைத்து அலுவலர்களுக்கும் மனோபாவங்கள் விருத்தி தொடர்பான வேலையரங்குகளையும் 2022 ஆம் ஆண்டில் நடத்தத் தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அமைச்சின் விடயப் பரப்பினுள் உள்ளடங்கும் நிறுவனங்கள், 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அடைந்த விஷேட சாதனைகள்

2.1 டவர் மண்டப திரையரங்கு மன்றம்




- நாடக துறையிலுள்ள 500 கலைஞர்களுக்கு **பிரேக்ஷா அவசர விபத்து மற்றும் மருத்துவக் காப்புறுதித் திட்டத்தின்** மூலம் நன்மைகள் கிடைத்துள்ளன. நாடகத் துறை சம்பந்தமான இத்தகைய தலையீடு முதல் சந்தர்ப்பம் இதுவாகும். இது ஒரு விஷேட அம்சமாகும். கௌரவ பிரமரின் தலைமையில் 2021.03.16 ஆம் திகதி அலரி மாளிகையில் காப்புறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. இது வரையில் 4 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பண நன்மைகள் கலைஞர்களுக்கு இந்தக் காப்புறுதித் திட்டத்தின் மூலம் கிடைத்துள்ளன.



- பல கலைத் துறைகள் நிமித்தம் உன்னத பங்களிப்பை நல்கிய 91 மூத்த சிரேஷ்ட கலைஞர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ. 7500/- வீத உதவி கொடுப்பனவு தொகை அருங்கலைக் கலைஞர்கள் ஜனாதிபதி நலன்புரி நிதியத்தின் (PWF) மூலம் வழங்கப்படுகின்றது.


- **திரைப்பட நிபுணர்களுக்கு கொடுப்பனவுகளை பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்** 50 மூத்த கலைஞர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.7500/- வீதம் கொடுப்பனவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டது.



- நாடகத் தயாரிப்புக்கு உதவிகளை பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாடகத் துறையில் பல பிரிவுகளை பிரதிநிதிப்படுத்துகின்ற 50 இளம் அங்கூர நாடகக் கலைஞர்களின் நேரடி பங்குபற்றலில் பர்ட்டோல் ப்ரெஸ்ட்டுகே "திரிபெனி" ஒபேரா பரிவர்த்தனை நாடகம் தயாரிக்கப்பட்டது.



- நாடகப் பாசாலைகள் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்துடன் ஒன்றிணைந்த ஒரு நிகழ்ச்சித் திட்டமாக செயற்படுத்தப்படும் "கல்வியியல் நாடக மற்றும் நடன (விஷேட) பட்டப்படிப்பு" நிகழ்ச்சித் திட்டத்தின் நாடக மற்றும் நடன கலை இரண்டு ஆண்டு முழு நேர உயர் டிப்ளோமா பாடநெறிக்கு 90 புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 2021.04.21 ஆம் திகதி மரதான எல்பிஸ்டென் திரையரங்கு கூடகத்தில் 2020/2021 கல்வி ஆண்டிற்கு



- மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் வைபவம் நடத்தப்பட்டது.

- நாடகம், நடனம் மற்றும் இன்னிசை பாடல்கள் என்பவற்றை பாதுகாக்கும் முகமாக சீடீ தட்டுக்களை தயாரிக்கும் திட்டத்தின் கீழ் பழைய பலவீனமான 16 நாடகப் பாடல்கள் உரிய இராகத்திற்கு அமைய தொகுக்கப்பட்டு நாடகப் பாடல்கள் பற்றிய விடய நிபுணத்துவம் வாய்ந்த சங்கீதவியலாளர்களின் அறிவுரைகளின் பேரில் சவ்சிறிபாய ஒலிப்பதிவு

கூடத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்டு 1000 சீடீ கட்புல தட்டுகள் தயாரிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இன்டர்நெட்டு சமூக ஊடகங்களின் ஊடாக ஒலிபரப்புவதற்கு தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- சிங்கள நாடகப் பிரதிகள் தமிழ் மொழியில் மொழிபெயர்க்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரபல நாடகவியலாளரான மறைந்த அமரர் சோமலதா சுபசிங்க அவர்களின் 02 சிறுவர் நாடகப் பிரதிகள் தமிழ் மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டு 1000 பிரதிகள் வீதம் வெளியிடப்பட்டுள்ளன.

- உத்ரா பாரதீய சங்கீத (பாடல் மற்றும் வாத்தியம்), கதை, பாரத நாட்டியம் நடன நிபுணர் பரீட்சை வரை 96 பரீட்சாத்திகள் இந்தியாவில் நடைபெறும் பரீட்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

- கலைஞர்களுக்கு புதுவருட பரிசில்கள் வழங்கல்.

2.1 இலங்கைக் கலை மன்றம்

இந்த நிறுவனத்தை தாபிப்பதன் ஊடாக எதிர்பார்த்த குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் பொருட்டு 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் விஷேட கவனத்தை செலுத்தி பல நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப் பட்டுள்ளன.

❖ கட்புலனாகு கலாச்சார மரபுரிமைகளை நாடு முழுதிலும் பிரபல்லியப்படுத்தல்

இலங்கைக் கலை மன்றத்தின் மூலம் பிரகடனப்படுத்திய இலங்கை கட்புலனாகு தேசிய மரபுரிமைகளாக கருதப்படும் பல பாரம்பரிய நாடகங்களும் நடனங்களும் பற்றிய விதிமுறைகளை பிரதிபலிக்கும் 17 நூல்களையும், புத்தர் சிலையை நிர்மாணிக்கும் போது பின்பற்ற வேண்டிய பொருத்தமான அளவீட்டு முறைகள் உள்ளடங்கிய "புத்தர் சிலை நிர்மாண கலை" நூலையும் வெளியிடும் வெளியீட்டு விழாவும் மற்றும் "கலை சஞ்சிகையை" மக்கள்மயப்படுத்தும் உத்தியோகபூர்வ வைபவ விழாவும் தேசிய மரபுரிமை, அருங்கலை மற்றும் கிராமியக் கலைகள் ஊக்குவிப்பு விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ விதுர விக்ரமநாயக்க அவர்களின் தலைமையில் 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி இந்த அமைச்சினது கேட்போர்கூடத்தில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. குறித்த இந்த வைபவங்களின் போது 18 நூல்கள் மக்களுக்காக வெளியிடப்பட்டன.

- **புத்தர் பாரம்பரிய சிற்ப முறைகளுடன் புத்தர் சிலைகளை உருவாக்கும் கலை**
- **எமது மரபுரிமை 01 - சொக்கரி நாடகம்**
- **எமது மரபுரிமை 02 - கோலம் நாடக பாரம்ப**
- **எமது மரபுரிமை 03 - பொம்மை நாட்டியக் க**
- **எமது மரபுரிமை 04 - நாடகக் கலை**
- **எமது மரபுரிமை 05 - நடனக் கலை**
- **எமது மரபுரிமை 06 - ரித்தியாகய**
- **எமது மரபுரிமை 07 - சன்னியக்கும**
- **எமது மரபுரிமை 08 - சூனியம் வெட்டுதல்**
- **எமது மரபுரிமை 09 - மஹசோன் சடங்கு**
- **எமது மரபுரிமை 10 - மேளவாத்தியக் கலை**
- **எமது மரபுரிமை 11 - கோல்முற யாகய**
- **எமது மரபுரிமை 12 - கம்மடு சாந்திகர்மம்**
- **எமது மரபுரிமை 13 - கொஹம்ப யக் கங்கார**
- **எமது மரபுரிமை 14 - குமார சமயம**
- **எமது மரபுரிமை 15 - விளக்குமடு சாந்திகர்ம**
- **எமது மரபுரிமை 16 - பலியிடும் சாந்திகர்மம்**
- **எமது மரபுரிமை 17 - பால்மடு சாந்திகர்மம்**



- 100 ஆண்டுகள் பழைமை வாய்ந்த கீழேத்தேய நடனக் கலையின் முன்னேற்றத்திற்கு அரும்பெரும் பணியாற்றிய லெபுணா பேதுரு டெனி என்ற கலைஞரை மதித்து கௌவிக்கும் முகமாக கலை மன்றத்தின் மூலம் ரூ. 50,000 நிதி 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07 ஆம் திகதி நன்கொடையாக வழங்கப்பட்டது.

  சொக்கரி நாடகத்தின் அரங்கேற்றம் பண்டாரவத்த, மெனிக்கடவர, துந்தோட்டை எனும் இடத்தில் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதி வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

2.3 கிராமிய ஜனகலா கேந்திர நிலையம்



இந்த நிறுவனத்தை தாபிப்பதன் மூலம் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்து கொள்ளும் பொருட்டு 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் விஷேட கவனத்தை செலுத்தி பல நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

- சகல பாடநெறிகளையும் தரப்படுத்துகின்ற விவகாரங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. உரிய பாடவிதானம் NAITA நிறுவகத்தின் மூலம் (Validate) செல்லுபடியாக்கப்பட்டு TVEC நிறுவகத்தின் ஊடாக தரப் படுத்தும் விடயங்கள் நிறைவு செய்யப் பட்டுள்ளன.



- பயிர்களுக்கும்மற்றும் பதவியணியினர்களுக்கும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்.
- கிராமிய ஜனகலா கேந்திர நிலையத்தின் புதிய ஒரு பாடநெறியாக பன்சலை ஓவியங்கள் பாதுகாப்பு குறுங்கால பாடநெறியொன்றை ஆரம்பித்தல்.
- கிராமிய ஜனகலா கேந்திர நிலையத்திற்கு சொந்தமான உரிய கட்டிடங்களை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் சங்கீத கல்விக் கட்டிடம், உத்தியோகபூர்வ இல்லங்கள், ஆண்கள் விடுதியின் சமையலறை என்பவற்றை நவீனப்படுத்தும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
- ஜனகலா கேந்திர நிலைய வளாகத்திலுள்ள கால்வாய்முறைமையை உரிய விதத்தில் பழுதுபார்க்கும் மற்றும் மாணவர் விடுதிகள் மற்றும் அலுவலக வசதிகளை மேம்படுத்தும் பணிகள் நிறைவு செய்யப் பட்டுள்ளன.

2.4 காலி மரபுரிமைகள் மன்றம்

- **சந்திர மரபுரிமைகள் கலரியின் எஞ்சிய அபிவிருத்திப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.** கோட்டையின் விழுமியங்களையும் மற்றும் கோட்டையுடன் இணைந்த புராதான விழுமியங்களையும் ஊக்குவிக்கும் வகையில் தாபிக்கப்பட்ட சிறுவர் ஓவிய கலரி இந்த ஆண்டு இறுதியில் மக்களின் பார்வைக்காக திறந்து வைக்கப் படவுள்ளது.
- **காலிக் கோட்டை புராதன சந்தி வீதி அபிவிருத்தி வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.** உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கும் மற்றும் மக்களுக்கும் உட்கட்டமைப்பு சார் வசதிகளை அபிவிருத்தி செய்தல், சுகாதாரப் பாதுகாப்பின் மீது ஒரு போட்டியை ஏற்படுத்துதல் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் முதலிய அம்சங்களின் ஊடாக காலிக் கோட்டையை சுற்றுலா ஸ்தலமாக மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.





➢ காலி மரபுரிமைகள் மன்றத்தின் அபிவிருத்திப் பணிகள்



- கோட்டையினுள் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் சேவைகளை வழங்கும், ஒழுங்குறுத்தும் ஒரு முக்கிய நிறுவனமாக அதன் பதவியணியினருக்கும் சேவைகளை நாடி வரும் வாடிக்கையாளர்களுக்கும் உகந்த பணி சூழலை ஏற்படுத்துதல்.
- காலி மரபுரிமைகள் மன்றத்தின் பதவியணியினருக்கும் சேவைகளை நாடி வரும் வாடிக்கையாளர்களுக்கும் பயன் படுத்துவதற்கு பொருத்தமான ஒரு மலசலகூட முறைமையை நிர்மாணித்தல்.



- நிறுவனத்தினது மலசலகூடத்தின் நீர் விநியோகம் இயங்காத நிலையில் உள்ளது. ஒரு நீரிறைக்கும் மோட்டார் இயந்திரத்தை நிறுவி நீர் விநியோகம் இயங்கும் நிலைக்கு கொண்டு வரப் பட்டுள்ளது.
- தகவல் நிலையத்திலுள்ள படிக்கட்டு சுவரையும் மற்றும் பாதுகாப்பு வேலியையும் நிர்மாணித்தல்.
    - அலுவலக கட்டிடங்களின் கூரைகளை பழுதுபார்த்தல், சுவர்களை புனர்நிர்மாணித்தல் (சுண்ணாம்பு பூசுதல்) மற்றும் நிலத்திற்கு தளவோடுகளைப் பொருத்துதல்.

➢ **பொலிஸ் உத்தியோகபூர்வ பங்களாவின் ஆட்சியுடமை காலி மரபுரிமைகள் மன்றத்திற்கு மாற்றிப் பெற்றுக் கொள்ளப்பட்டமை** எமக்கு கிடைத்த பெரும் விஷேட வெற்றியாகும். இதனை அபிவிருத்தி செய்து வருமானம் ஈட்டும் ஒரு கருத் திட்டமாக பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம் மாதாந்தம் சுமார் 12 இலட்சம் ரூபா அளவான வாடகையை ஈட்டமுடியும். ஆகையால் பொதுத் திறைசேரிக்கு சாட்டப்படும் செலவு பொறுப்பை கணிசமானளவுக்கு இதனால் குறைத்துக் கொள்ள முடியும்.

காலிக் கோட்டையினுள் இரண்டு இடங்களில் விரிவான இரண்டு பைபெர் வரைபடங்களை தயாரித்து ஸ்தாபிக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கும் மற்றும் சுற்றுலா வழிகாட்டிகளுக்கும் சரியான அறிவையும் மற்றும் தகவல்களையும் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரு உகந்த முறையியலை உருவாக்குவது இதன் நோக்கமாகும்.

2.5 மகிந்த ராஜபக்ஷ தேசிய குறுங்நாடக திரையரங்கு

- இந்தத் திரையரங்கினுள் மாபெரும் காட்சிப் பின்னணியாக பாவிக்கப்படும் ஜம்புகஸவெவ திட்டம் நான்கு கட்டத்தில் புனர்நிர்மாணிக்கப் படுகின்றது. இந்த ஆண்டினுள் அதன் முதல் கட்டத்திற்கு 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. குறித்த கருத் திட்டம் இந்த ஆண்டு இறுதியளவில் குறுங் திரைப் படங்கள் தயாரிப்பின் நிமித்தம் உன்னத மட்டத்தில் ஒரு காட்சிப் பின்னணியாக மேம்படுத்தப்படும். ஏற்கெனவே முதல் கட்டத்தின் பணிகள் 100% வீதம் நிறைவு செய்யப்பட்டுள்ளன. ஆகையால் ஒரு குளம் அடங்கிய ஒரு பாரம்பரிய கிராமியக் காட்சியை படம் பிடிக்கக் கூடிய ஒரு பின்னணியாக தயாரிப்பாளர்களுக்கு அந்த பிரதேசத்தை அவர்களின் ஆக்கங்களுக்காக பயன்படுத்திக் கொள்ள முடியும்.

புதிய நகரப் பிரதேசத்தில் மலசலகூடங்கள் முறைமையொன்று இல்லாத காரணத்தினால் சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக வரும் கலைஞர்களும் மற்றும் திரையரங்கை பார்வையிடுவதற்காக வருகின்ற பார்வையாளர்களும் முகம்கொடுக்கும் கஷ்டங்களுக்கு ஒரு தீரவாக நகரப் பிரதேசத்தினுள் புதிய மலசலகூடங்கள் முறைமை ஒன்றை நிர்மாணிக்கும் பணிகள் ஏற்கெனவே நிறைவு செய்யப் பட்டுள்ளன. இந்தக் கருத் திட்டத்தின் நிமித்தம் 7.5 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது. சேவைகளைப் பெறுவதற்கு நாடி வரும் வாடிக்கையாளர்களுக்கும் திரையரங்கை பார்வையிடுவதற்காக







வருகின்ற பார்வையாளர்களுக்கும் உன்னத மட்டத்தில் மலசலகூட வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்கு இந்தத் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. அம்பாந்தோட்டை மாவட்ட செயலாளர் அலுவலகத்தினது மாவட்டப் பொறியியலாளரின் மேற்பார்வையில் இந்தக் கருத் திட்டம் செயற்படுத்தப்பட்டது.

- திரையரங்கு கிராமத்தை மேம்படுத்தும் கருத் திட்டத்தின் கீழ் ஐந்து கிராமிய வீடுகளையும் மற்றும் கோரளை வளவையையும் புனர்-நிர்மாணித்தல், நகரப் பிரதேசத்திலுள்ள காகில்ஸ் கட்டிடங்கள், நிப்பொன் ஹோட்டல், வங்கிக் கட்டிடங்கள் என்பவற்றை நவீனப் படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இங்கு கலைஞர்களுக்கு அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப மாற்றிக் கொள்ளக் கூடிய காட்சி வசதிகள் இதன் மூலம் கிடைக்கச் செய்யப் படும். பார்வையாளர்கள் இதன் மூலம் கவரப்படுவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

- தெற்காசியாவில் மிகப்பெரிய பசுமை சுவருடைய (Green Wall) ஓவிய சாலையை நவீனப்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் நிமித்தம் இந்த ஆண்டினுள் ஒதுக்கப்பட்டுள்ள நிதியேற்பாடு சார்ந்த மட்டுப்பாடுகளின் கீழ் இந்த ஆண்டு காலப் பகுதியில் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படும் பணிகளை நிறைவு செய்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு குறுங் திரைப்படங்களைத் தயாரிக்கும் விடயங்களுக்கு உரிமை மாற்றிக்கையளிக்க எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த ஓவிய

சாலையின் பசுமை சுவர் நவீனப்படுத்தப்பட்டதன் பின்னர் உலகில் எந்தவொரு காட்சிப் பின்னணிக்கும் பிரதியீடு செய்யக் கூடியவாறு நவீன தொழில்நுட்ப முறைமையின் கீழ் படம் பிடிக்கும் விடயங்களை மேற்கொள்ள கலைஞர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும்.

- 2021 ஆம் ஆண்டில் திரையரங்னை நவீனப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளும் முகமாக வரவுசெலவுத்திட்டத்திலிருந்து ஒதுக்கப் பட்ட 50 மில்லியன் ரூபா நிதியை முழுமையாக பயன்படுத்தி 100% வீத நிதி மற்றும் பௌதீக முன்னேற்றமொன்றை அடைய முடிந்தமை ஒரு விஷேடத்துவமாகும்.

- 2020 மற்றும் 2021 ஆகிய இரண்டு ஆண்டுகள் முழுதிலும் பரவிவந்த கொவிட் தொற்றுநோய் நிலைமையில் இந்த திரையரங்கு கொவிட் தொற்நோயாளர்களை தனிமைப்படுத்தும் ஒரு நிலையமாக அதிக காலம் பயன்படுத்தப்பட்டதால் திரைப்படங்களை படம்பிடிக்கும் விடயங்களுக்கு தடைகள் ஏற்பட்டிருந்தாலும் திரையரங்கினுள் உயிர் பெற்று இயங்கி வருகின்ற 'கூழிர சாகரய கெலம்பணி' என்ற திரைப் படத்தின் சகல படப்பிடிப்பு அம்சங்களும் திரையரங்கை மையமாகக் கொண்டு மேற்கொள்ள இயலுமாக இருந்தமை எமக்கு கிடைத்த ஒரு வெற்றியாகும்.

2.6 தேசிய அருங்கலை நிலையம் (தாமரைத் தடாகம்)

நாட்டில் நிலவும் தற்போதைய கொவிட் தொற்றுநோய் நிலவரத்தின் காரணமாக இந்த நிலையத்தின் அருங்கலைசார் செயற்பாடுகளும் மற்றும் விழாக்களும் ஓரளவுக்கு மட்டுப்பட்டாலும் அந்த சவால்கள் நிறைந்த நிலையிலும் 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அருங்கலை சார் செயற்பாடு மற்றும் விழா செயற்பாடு முதலிய செயற்பாடுகளை சுகாதார ரீதியில் பாதுகாப்பாக மேற்கொண்டு 15.3 மில்லியன் ரூபா வருமானத்தை இந்த நிலையத்தினால் ஈட்டமுடிந்தது. இங்கு மகளிர் மகிமை 2020-2021, AIMS நிறுவன பட்டமளிப்பு விழா, IIHE நிறுவன பட்டமளிப்பு விழா மற்றும் மணமகள் மணமகன் களியாட்டம் 2020 போன்ற விழாக்களை நடத்துவதற்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.










2.7 மலைநாட்டு மரபுரிமை பாதுகாப்புகள் இடைக்கால நியதிச் சட்ட சபை

இந்த சபையைத் தாபிப்பதன் மூலம் எதிர்பார்த்த குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் பொருட்டு 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் விஷேட கவனத்தை செலுத்தி அதிக பல நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப் பட்டுள்ளன.

- **நிறுவன நூலக அபிவிருத்தி**

தற்பொழுதுள்ள நிறுவன நூலகத்தை மிகவும் முறையாகவும் மற்றும் போதியளவிலும் நூல்களையும் மற்றும் உபகரணங்களையும் வழங்கி போஷிப்பது இந்தக் கருத் திட்டத்தின் நோக்கமாகும். நூல்களை படிப்பதற்கு பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், கலைக்கல்வி நிலைய மாணவர்கள் ஆகியோர் அடங்கலாக வெளித் தரப்புகளுக்கும் வாய்ப்பு அளிக்கப்படுகின்றது.





- **ஊவா நூதனசாலையை நவீனப்படுத்துதல்**

இலங்கையின் மிகப் புராதன எழுத்துக் கலைகள் பற்றிய கல்வியை கற்பிக்கும் மற்றும் அந்தக் கல்வியைப் பாதுகாக்கும் பொருட்டு கடந்த காலங்களில் எழுதப்பட்டுள்ள ஏடுகளை கணக்கெடுத்து அத்தகைய ஏடுகளை பாதுகாக்கும் பணி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ரஜ மகா விகாரையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 1.3 மில்லியன் ரூபா நிதி இதன் நிமித்தம் செலவிடப் பட்டது.





- **மலைநாட்டு மரபுரிமைகள் மைய கையேடுகளை பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துதல்**

குறித்த இந்தக் கருத் திட்டத்தின் கீழ் ஒரு நூலிருந்து ஆகக்கூடியது 350 என்ற உச்ச எண்ணிக்கைக்கு அமைய 18,500 எண்ணிக்கைக்கும் அதிக நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இந்த நூல்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளுக்கும், பல்கலைக் கழகங்களுக்கும் மற்றும் பொது நூலகங்களுக்கும் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளன.





- **ஶ்ரீ சங்கபோதி பிரிவெனா, தம்மசித்யாராமய மற்றும் புரிஜ்ஜல மாத்தளை பிரிவெனா ஆகிய பிரிவெனாக்களில் காணப்படும் பழைய புராதன ஏடுகளை பாதுகாக்கும் பொருட்டு இதன் மூலம் நூலக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.**



புனர்நிமாணத்திற்கு முன்னர் பாவித்த நூலகம்



நூலக மற்றும் ஏடுகள் பாதுகாப்பு பிரிவாக நவீனப்படுத்திய பின்னருள்ள கட்டிடம்

அந்தக் கருத் திட்டங்களுக்கு மேலதிகமாக இந்த ஆண்டு முடிவடைய முன்னர் கீழ்காணும் கருத் திட்டங்களின் பணிகள் நிறைவு செய்யப் பட்டு ஏற்கெனவே செயற்படுத்தப்பட்டு வருகின்றன.


- ஹிந்தகல ரஜ மகா விகாரையின் சுவர் ஓவியங்களை பராமரிக்கும் மற்றும் பாதுகாக்கும் கருத் திட்டம்
- எஹலபொல புராதன விகாரையில் அமைந்திருக்கின்ற மாத்தளை விருவன் அனுஸ்மரண சாலை மண்டபத்தின் எஞ்சிய வேலைகளை நிறைவு செய்தல் (கட்டம் I மற்றும் கட்டம் II)
- குறித்த பிரதசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அறநெறிப் பாடசாலை நூலகத்திற்கு புத்தகங்களை பகிர்ந்தளித்தல்
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வீரம் மற்றும் மகளிர் ஆகிய தினக் கொண்டாட்டங்கள் பற்றிய கருத் திட்டம்
- "ஓவியங்கள் மற்றும் புத்தர் சிலை நிர்மாண கலை விதிகள் பற்றிய நூல்களை அச்சிடுதல்
- புராதன பாரம்பரிய சாந்தி கர்மம், கிராம மக்களின் நம்பிக்கை, உபசரணை பற்றிய விதிகள் மற்றும் பழக்கவழக்கங்கள் முதலிய விடய அம்சங்களை பாதுகாத்தல்

2.8. தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களம்

இந்த நிறுவனத்தை தாபிப்பதன் ஊடாக எதிர்பார்த்த குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் பொருட்டு 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் விஷேட கவனத்தை செலுத்தி பல நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப் பட்டுள்ளன.

- **அகழ்வு மற்றும் ஆவணப்படுத்தல் திட்டத்தின் கீழ்** ஹிருவடுன்ன தொல்பொருள் ஸ்தல அகழ்வுகள், நாகொல்ல தொல்பொருள் ஸ்தல அகழ்வுகள் சம்பந்தமான பணிகளும் மற்றும் தொல்பொருள் ஸ்தலங்களுக்கு எல்லை வேலியிடும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.





❖ **அகழ்வுக் கருத் திட்டத்தின் கீழ்** குருந்திபப்பெத்த விகாரை அகழ்வு, காடிகல புராதன தூபி கொட்டுவ அகழ்வு மற்றும் யாப்பகூவ ஆராய்ச்சி மற்றும் அகழ்வு சம்பந்தமான பணிகள் ஏற்கெனவே செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

❖ கல்வெட்டு மற்றும் நாணய பாதுகாப்புத் திட்டம்





மட்டக்களப்பு பூலூற்றுமானோடை கல்வெட்டுக்கள் பிரதிபண்ணல், கட்டக்கலைகள் பாதுகாப்பு, தீகவாவி கொட்டுவ பாதுகாப்பு, உளுகல சங்காவாச பாதுகாப்பு மற்றும் பயாகல வெஹரகல கந்தை புரதான விகாரை பாதுகாப்பு சம்பந்தமான பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

❖ **இரசாயன பாதுகாப்பு**

கலபாத புராதன விகாரை ஓவியங்கள் மற்றும் செதுக்கல் வேலைகள் பாதுகாப்பு, சுதர்ஷன பரமானந்த விகாரையின் ஓவியங்கள் மற்றும் செதுக்கல் வேலைகள் பாதுகாப்பு மற்றும் களி மண்ணினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள கொட்டமுல்ல விகாரையின் ஓவியங்கள் மற்றும் செதுக்கல் வேலைகள் பாதுகாப்பு பற்றிய கருத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.





❖ **நூதனசாலை**

மாத்தறை நட்சத்திர கோட்டையை பேணிப் பராமரித்தல், பனாட்டிய தகவல் நிலையத்தை பேணிப் பராமரித்தல் மற்றும் வயினே நூதன சாலையை பேணிப் பராமரித்தல் (கோட்டை/ அனுராதபுரம்/ யட்டால /திருகோணமலை)

❖ **ஊக்குவிப்பு**

தேசிய தொல்பொருள் சம்பந்தமான மாநாட்டை நடத்துதல் மற்றும் வெளியீடுகளை வெளியிடுதல்





❖ **ரிட்டிகல பந்தா தடாகத்தை புனர்நிர்மாணித்து பாதுகாத்தல்**





2.9 அபே கம

இந்த நிறுவனத்தை தாபிப்பதன் ஊடாக எதிர்பார்த்த குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் பொருட்டு 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் விஷேட கவனத்தை செலுத்தி பல நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப் பட்டுள்ளன.

- **அபே கம மக்கள் மரபுரிமை நிலையத்தை ஒரு நியதிச்சட்ட சபையாக மாற்றுவதற்கான** சட்டமூலத்தை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. குறித்த அந்த சட்டமூலத்தை எதிர்காலத்தில் சட்டவரையுநர் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கும் மற்றும் அதன் பின்னர் பாராளுமன்றத்தில் ஆற்றுப்படுத்துவதற்கும் மற்றும் இந்த நிறுவனத்தை ஒரு நியதிச்சட்டப் பிரிவாக தாபிப்பதற்கும் தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- **தொழில்முயற்சிகள் அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்தல்**

  அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சுய நிதியீட்டும் ஒரு நிதி நிறுவனமாக நிருவகித்து செல்லும் பொருட்டு தேவையான அபிவிருத்தித் திட்டம் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. அது அமைச்சரவையின் அங்கீகாரத்தின் நிமித்தம் சமர்ப்பிக்கப்பட்டது.

- **விற்பனை மற்றும் ஊக்குவிப்புத் திட்டத்தைத் தயாரித்தல்**

  அபே கம என்ற ஒரு வணிகப் பெயராக பதிவு செய்தல். ஒரு இணையத் தள வசதியை நிர்மாணித்தல். ஒரு யூ டியூப் ஊடக வசதியை ஆரம்பித்தல் மற்றும் சமூக ஊடகப் பாவனையில் முகநூல் ட்டுவிட்டர் லிங்டிங் இன்டர்ஸ்கிராம் பிரயோக வசதி என்பன தயாரிக்கப்பட்டு வருகின்றன.

தூரநோக்கு

தேசிய மரபுரிமைகள் பாதுகாப்பு, அருங்கலைகள் மற்றும் கிராமிய கலைகள் என்பவற்றை ஊக்குவித்தல் முதலிய அம்சங்களான மிகவும் பரந்த மூன்று பிரிவுகளுக்குரிய விடயங்கள் இந்த இராஜாங்க அமைச்சின் விடயப் பரப்பில் வருகின்றன. தற்பொழுது காணப்படுகின்ற கட்டளைச் சட்டங்கள் மற்றும் சட்டதிட்டங்கள் என்பவற்றின் சட்டவரையறைகளுக்கு இணங்க மேற்குறித்த பிரதான பிரிவுகளுக்குரிய கரும விடயங்களை செயற்படுத்துவதன் மூலம் அந்த விடயங்களின் நிமித்தம் புதிய ஒரு அமைச்சை தாபிக்கும் நோக்கங்களையும் மற்றும் குறிக்கோள்களையும் அடைந்து கொள்வதற்கும் மற்றும் அதனை இந்த நாட்டு சமூக அபிவிருத்தி சார் செயற்பாடுகளின் நிமித்தம் பங்களிப்பு செய்யக் கூடிய விதத்தில் அமைச்சினால் முறையான ஒரு வேலைத் திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது.

தேசிய மரபுரிமைகள், இலக்கியம் மற்றும் கலைகள் என்பவற்றை ஊக்குவித்து அதன் ஊடாக பெருமைமிக்க ஓர் இலங்கை என்ற தூரநோக்குத் திட்டத்தின் கீழ் பதினொரு விஷேட குறிக்கோள்களினதும் மற்றும் ஏழு விஷேட முன்னுரிமை அம்சங்களினதும் அடிப்படையில் அமைச்சினுடைய எதிர்கால நடவடிக்கைகள் உள்ளடங்கிய ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த அந்தத் திட்டத்தை செயற்படுத்தும் முகமாக ஒரு சில கருத் திட்டங்கள் நேரடியாக இந்த அமைச்சு மூலம் செயற்படுத்தப்படுகின்றன. ஏனைய கருத் திட்டங்களும் நிகழ்ச்சித் திட்டங்களும் அமைச்சின் செயல்நோக்கின் கீழ் வரும் நிறுவனங்களினாலும் மற்றும் திணைக்களங்களினாலும் செயற்படுத்தப்படுகின்றன.

தேசிய மரபுரிமைகளை இனங்காணும் பொருட்டு சரியான ஒரு முறையியல் இல்லாமையானது அந்தத் துறையில் காணப்படுகின்ற மிகவும் முக்கியமான ஒரு பிரச்சினையாக இனங்காணப்பட்டுள்ளது. ஆகையால் அதன் நிமித்தம் சரியான ஒரு முறையியலை தயாரிப்பதற்கான ஒரு நிபுணத்துவக் குழு 2021 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டது. குறித்த அந்த நிபுணத்துவக் குழு தயாரித்த அறிக்கைக்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது. அமைச்சரவையின் மூலம் கிடைத்துள்ள தீர்மானத்தை செயற்படுத்துவதற்கான ஒரு வேலைத் திட்டத்தை எதிர்காலத்தில் தயாரிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

அதே போல் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனமான சௌபாக்கிய தூர நோக்குத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சகல மக்கள் பிரிவினருக்கும் மற்றும் சமயங்களுக்கும் உரித்தான தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சமய வழிபாட்டு ஸ்தலங்கள் மற்றும் தேசிய மரபுரிமைகள் என்பன பற்றிய தகவல்கள் அடங்கிய "டிஜிட்டல் தொல்பொருள் அகராதி ஒன்றை தயாரிக்கும்" குறிக்கோளை அடைந்து கொள்ளும் முகமாக சகல மரபுரிமைகளும் உள்ளடங்கிய ஒரு டிஜிட்டல் தகவல் முறைமையை தயாரிக்கும் பொருட்டு ஆரம்பப் பூர்வாங்கப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களம் மற்றும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவகம் ஆகியவற்றுடன் ஒன்றாக இணைந்து இந்தக் கரும பணியை மேற்கொள்ள இலக்குக் கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை முழுதிலும் பரந்து காணப்படுகின்ற அனைத்து பிரிவுகளினதும் உரிய கலைஞர்களின் விபரங்கள் அடங்கிய ஒரு கலைஞர்கள் தகவல் முறைமையை தயாரிக்கும் பணி ஏற்கெனவே நிறைவு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தகவல் முறைமைக்கு நாடு முழுதிலுமுள்ள கலைஞர்களின் தகவல்கள் உள்ளடக்கப் பட்டு இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றது. சுற்றுலா அமைச்சுடன் இணைந்து சுற்றுலா துறை அருங்கலை மற்றும் ஏனைய கலை செயற்பாடுகளின் நிமித்தம் கலைஞர்களை இணைத்துக் கொண்டு இது பரந்த ஒரு நிகழ்ச்சித் திட்டமாக எதிர்காலத்தில் பரிவர்த்தனை செய்யப்படும். கலைஞர்களின் முன்னேற்றக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு இதன் மூலம் பங்களிப்பு செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் ஊடாக கலைஞர்களின் தொழில் பாதுகாப்பு உறுதிசெய்யப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் வாழுகின்ற ஆதிவாசிகளும் மற்றும் வேறு விஷேட தனித்துவ அடையாளங்கள் உடைய மக்களும் முன்னோக்கி நகர்வதற்கும் அவர்களை பாதுகாப்பதற்கும் தேவையான நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதன் ஊடாக அந்த மக்களின் பிரஜை உரிமைகளை பாதுகாப்பதற்கும் மற்றும் அந்த மக்களின் நாளாந்த வாழ்க்கை விடய விவகாரங்களைப் பேணிச்செல்வதற்கும் தேவையான உதவிகளை வழங்கும் அம்சம் எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்களில் அமைச்சினால் உள்ளீர்க்கப்படும். அதே போல் தம்பான மக்கள் மரபுரிமைகள் கேந்திர நிலையத்தை சிறந்த நிலையில் நிருவகித்து செல்லும் பொருட்டு ஒரு முறையான பொறிமுறைத்திட்டம் தயாரிக்கப்படும்.

தேசிய அபிமான அடிப்படையில் நூலாசிரியர்களின் நூல் பதிப்புரிமைகளுக்கு கொடுப்பனவுகளை செலுத்தும் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சர்வதேச சமவாயங்களுக்கு இணங்க முறையான உகந்த ஒரு பொறிமுறைத்திட்டத்தை அறிமுகப்படுத்தும் பொறுப்பு, தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய கலை ஊக்குவிப்பு விவகாரங்கள் அமைச்சுக்கு அரசாங்க வர்த்தமானி மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஒரு விஷேட கரும பணியாகும். நூலாசிரியர்கள் பதிப்புரிமைகளுக்கு கொடுப்பனவுகளை செலுத்தும் குறித்த முறையியலானது தற்பொழுது சங்கீத துறைக்கு மாத்திரம் ஓரளவு செயற்படுத்தப்படுகின்றது. ஆகையால், அதன் நிமித்தம் முறையான உகந்த ஒரு பொறிமுறைத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு தேவையான பூர்வாங்க முதல் ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. ஆக்கங்களின் உண்மையான உரிமையாளர்களுக்குரி பதிப்புரிமை இதன் மூலம் உறுதிசெய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த அம்ச விடயங்களையும் கருத்திற் கொண்டு நூலாசிரியர்களின் நூல் பதிப்புரிமைக்கு கொடுப்பனவுகளை செலுத்த பொருத்தமான ஒரு முறையியலை தயாரிக்க அமைச்சு உரிய

நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளது. நூல்களுக்கான பதிப்புரிமை உள்ள பல துறை விடயங்களின் செயற்பாடு ஒன்றுக்கொன்று வேறுபடுவதால் அனைத்துத் துறைகளுக்கும் பொதுவான ஒரு பொறிமுறைத்திட்டத்தை தயாரிப்பது சவால்கள் நிறைந்த ஒரு விடயமாகும். ஆகையால் பல துறைகளில் விஷேட கவனம் செலுத்தப்பட்டு வருகின்ற இந்த பொறிமுறைத்திட்டம் தயாரிக்கப்படும்.

இந்த நாட்டில் கலைத் துறையை பிரதிநிதிப்படுத்துகின்ற அநேகமான கலைஞர்களுக்கு நிரந்தர வருமான வழிகள் ஏதும் கிடையாது. அநேகமான கலைஞர்கள் அவர்களின் வாழ்வாதாரத்தை கடும் கஷ்டங்களுக்கு மத்தியில் பேணிச்செல்கின்றனர். நீண்டகாலம் கலைத் துறையில் ஈடுபடுகின்ற போது எதிர்கால பாதுகாப்பு கருத்திற் கொள்ளப்படா விட்டாலும், கலையை முன்னிட்டு விஷேட கருமம் நிறைவேற்றப்படுகின்ற சந்தர்ப்பங்கள் மிகவும் அரிதாகும். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் கலைஞர்களினதும் கலை நிபுணர்களினதும் சமூகப் பாதுகாப்பை உறுதிசெய்யும் பொருட்டு அவசரவ விபத்து மற்றும் மருத்துவக் காப்புறுதித் திட்டம் ஏற்கெனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து செயற்படுத்தத் தேவையான நிதி வசதிகளை பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

இலங்கையின் பழைய புராதன தனித்துவமான அடையாளத்தை பாதுகாக்கும் பொருட்டு எமது தேசிய மரபுரிமைகளை பாதுகாத்து அவற்றை எதிர்கால சந்ததியினருக்கு அருளும் முகமாக அவர்களின் தாயகத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் ஆக்கங்கள், அவர்கள் கணனிமயப்படுத்திய அவர்களின் உபகரணங்கள், அவர்களின் புகைப்படங்கள், வாழ்க்கை நிகழ்வுகள் என்பன பிரதிபலிக்கப்படும் வகையில் கிராமிய கலைக் கிராமத்தை நிர்மாணிப்பதன் ஊடாக இன்றுள்ள மக்களுக்கு தேசிய கலைஞர்கள் பற்றிய அறிவை பெற்றுக் கொடுக்கும் குறிக்கோளுடன் இந்தக் கருத் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

